சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண்.1 திருச்சிராப்பள்ளி
(மோட்டார் வாகன விபத்து நட்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்)

**எம்.சி.ஓ.பி. எண். 1342/2023**

**ம.சா. – 1**

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ம் நாள் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) Gr.I. Bench Clerk Tmt.R.Jegadeeshwari என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | தொழில் | |
| தந்தை/ கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | கிராமம் | |

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து குறித்து என் மனைவி தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் போய் சொன்னபோது வெள்ளை பேப்பரில் கையெழுத்து மட்டும் வாங்கி கொண்டார்கள். மருத்துவமனையில் இருக்கும்போது என் மனைவியை விசாரித்தார்களா என்றால் வந்து வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கி கொண்டு போனது தான் மற்றபடி விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்க்கவில்லை. நான் உறையூரில் உள்ள அரசு பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான். என் மனைவி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் Clerk ஆக வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். என் மகன் விபத்து சமயத்தில் அரசு பேருந்தை வலது புறமாக முந்த முயற்சித்ததாக குறிப்பிட்டு எழுதப்பட்டு இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு படித்து பார்க்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெள்ளை பேப்பரில்

கையெழுத்து வாங்கி கொண்டு போனாதை பற்றி உயர் அதிகாரிகளுக்கு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் மனைவியிடம் கையெழுத்து வாங்கும்போது நானும் உடனிருந்தேனா என்றால் மருத்துவமனையில் இரண்டு பேரும் தான் இருந்தோம். போலீசார் வெற்று பேப்பரில் கையெழுத்து கேட்கும்போது ஏன் எதற்கு என்று கேட்டேனா என்றால் என் மகன் இறந்துவிட்டதால் அந்த வருத்தத்தில் நான் எதுவும் கேட்கவில்லை. விபத்து நடந்த இடத்தில் நான் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ. 1 ஆவணமாக தாக்கல் செய்யும்போது நான் ஏன் படித்து பார்க்கவில்லை என்றால் என் மகனோ இறந்து போய் விட்டான் என்று படித்து பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் என் மகன் தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். என் மகனுக்கு விபத்து சமயத்திலல் 18 வயது முடிந்துவிட்டது. என் மகனின் 07.08.2005 என்றால் சரிதான். அந்த வாகனத்தில் ஆர்.சி புத்தகம், இன்சூரன்ஸ், எனது மகனின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் 12 ம் வகுப்பு முடித்துவிட்டு மாணவர்களுக்கு வகுப்பு எடுத்து சம்பாதித்தற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Indian Air Force Exam யை எழுதுவதற்கான Hall Ticket யை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த Exam முடிவு குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் என் மனைவியும் வேலைக்கு போய் வருமானம் ஈட்டுகிறோம் என்றால் சரிதான். என் மகனின் இறப்பு சமயத்தில் அவர் எந்த வருமானமும் ஈட்டவில்லை என்றும் அவரது இறப்பால் எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்துக்கு என் மகனின் கவனக்குறைவு தான் காரணம் என்றும், அவர் இளவர் என்பதால் License

இல்லாமல் வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி முன்னால் சென்ற எதிர்மனுதாரர் வாகனத்தை முந்த முயற்சித்தபோது சாலையின் நடுவே இருந்த தடுப்பு சுவர் மீது மோதி அவரே கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரிதான். விபத்திற்கு அவர் காரணம் என்பதால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சாட்சியம் அளித்ததை
தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு
தட்டெழுத்தரால்கணிணியில்தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்குபடித்துக்காண்பிக்கப்பட்டு,அவரால்சரிஎன்று
ஒப்புக்கொள்ளப் பட்டு, அவரது கையொப்பம்
பெறப்பட்டது.

சிறப்பு மாவட்ட நீதிபதி ,
திருச்சிராப்பள்ளி